‘‘இலவச வேட்டி, சேலை: விசைத்தறிகளிடம் மொத்தமாக வாங்கி, ஏழை கைத்தறி நெசவாளர்களுக்கு துரோகம் இழைப்பதா’’?

ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஆக 30– தமிழ்நாட்டில் 2025ம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான வேட்டி, சேலைகள் முழுவதையும் ஒட்டுமொத்தமாக விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து வாங்கவிருப்பதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்ட திட்டத்தின் நோக்கத்தை சிதைத்து கைத்தறியாளர்களுக்கு துரோகம் இழைப்பது கண்டிக்கத்தக்கது என்று பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க) நிறுவனர் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழ்ப்புத்தாண்டு மற்றும் தைத்திங்கள் நாளையொட்டி தமிழக மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு கோடியே 77 லட்சத்து 64,476 புடவைகளும், ஒரு கோடியே 77 லட்சத்து 22,995 வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட உள்ளன. இந்த வேட்டி & சேலைகள் முழுவதையும் விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய தமிழக அரசின் கைத்தறி, கைத்திறன் மற்றும் துணிநூல் துறை முடிவு செய்துள்ளது. அதற்காக முதல் கட்டமாக ரூ.100 கோடியை ஒதுக்கீடு செய்து கடந்த 27ம் நாள் அரசாணை பிறப்பித்திருக்கிறது.

வழக்கமாக, பொங்கல் திருநாளுக்கு தேவைப்படும் வேட்டி&சேலைகளின் ஒரு பகுதி கைத்தறி நெசவாளர்களிடமிருந்தும், இன்னொரு பகுதி விசைத்தறியாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படும். கடந்த ஆண்டு தலா 1.73 கோடி வேட்டிகளும், சேலைகளும் வாங்கப்பட்ட நிலையில், ஒரு கோடி வேட்டிகளும், 1.24 கோடி சேலைகளும் மட்டும் தான் விசைத்தறியாளர்களிடமிருந்து வாங்கப்பட்டன. மீதமுள்ள 73 லட்சம் வேட்டிகளும், சுமார் 50 லட்சம் சேலைகளும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்து தான் வாங்கப்பட்டன. ஆனால், இந்த முறை ஒட்டுமொத்த வேட்டி, சேலைகளை விசைத்தறியாளர்களிடமிருந்து வாங்குவதற்கு தமிழக அரசு முடிவு செய்திருப்பது கைத்தறி நெசவாளர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம் ஆகும். நடப்பாண்டில் தான் முதன் முறையாக கைத்தறியாளர்கள் புறக்கணிக்கட்டுள்ளனர்.

வேலை இழக்கும் அபாயம்

இந்த முடிவால், கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ள தமிழக அரசு, அந்த பாதிப்பை ஈடு செய்யும் வகையில், முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படும் வேட்டி, சேலைகளை முழுக்க, முழுக்க கைத்தறி நெசவாளர்களிடமிருந்து வாங்க ஆணையிட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது. இதை விட பெரிய ஏமாற்று வேலையும், மோசடியும் இருக்க முடியாது. கடந்த ஆண்டில் இருந்த நடைமுறையே நடப்பாண்டிலும் பின்பற்றப்பட்டிருந்தால், 73 லட்சம் வேட்டிகள், 50 லட்சம் சேலைகள் என மொத்தம் 1.23 கோடி துணிகளை உற்பத்தி செய்யும் வாய்ப்பு கைத்தறி நெசவாளர்களுக்கு கிடைத்து இருக்கும். ஆனால், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு வகையான ஓய்வூதியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கையே 34.90 லட்சம் மட்டும் தான். அதனால், அதிகபட்சமாகவே 35 லட்சம் துணிகள் தான் இம்முறை கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும். இது கடந்த ஆண்டின் அளவில் வெறும் 28.37% மட்டும் தான். இதனால் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வேலை இழப்பர்.

கைத்தறி நெசவாளர்களிடமிருந்து ஒரு வேட்டி & சேலை கூட வாங்காமல், அனைத்து வேட்டி, சேலைகளும் கைத்தறி மற்றும் பெடல் தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதாக தமிழக அரசு கூறியிருப்பது தமிழ்நாட்டு மக்களை தவறாக வழி நடத்தும் செயலாகும். இதற்காக தமிழ்நாட்டு மக்களிடம் தமிழக அரசு மன்னிப்பு கேட்க வேண்டும்.

அரசாணையை ரத்து செய்

விசைத்தறியாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகிய இரு தரப்பினரின் நலன்களையும் பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உண்டு. ஆனால், ஒரு தரப்பினரின் நலன்களை புறக்கணித்து விட்டு, இன்னொரு தரப்பினரின் நலன்களை பாதுகாக்கக் கூடாது. இது பெரும் தவறாகும். எனவே, இலவச வேட்டி & சேலை தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையை ரத்து செய்து விட்டு, கடந்த ஆண்டைப் போலவே கைத்தறி நெசவாளர்களிடமிருந்து குறைந்தது மூன்றில் ஒரு பங்கு வேட்டி& சேலைகளையாவது கொள்முதல் செய்யும் வகையில் புதிய அரசாணையை தமிழக அரசு வெளியிட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் நிலவும் சுகாதார சீர்கேட்டை சரிசெய்ய வேண்டும்: தமிழக அரசுக்கு எடப்பாடி வலியுறுத்தல்

சென்னை, ஆக.30– அரசு மருத்துவமனைகளில் நிலவும் சுகாதார சீர்கேட்டை சரிசெய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிங்காரச் சென்னை, சிங்கப்பூர் சென்னை என்றெல்லாம் வாய்நீளம் காட்டும் தி.மு.க. அரசின் அவலங்களில் ஒன்றாக சென்னை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை கழிவு நீரால் சூழ்ந்து, துர்நாற்றம் வீசுவதோடு நோய்த் தொற்று ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் வந்துள்ளன.

மருத்துவமனைக்குள் இருதயப் பிரிவு, நரம்பு மண்டலப் பிரிவு போன்ற முக்கிய துறைகளுக்கு அருகே கழிவு நீர் தேங்கியுள்ளது. குறிப்பாக, கழிவறைக்கு உள்ளே சென்று தண்ணீர் ஊற்றினால் அது வெளியில்தான் வருகிறது என்றும், அந்தக் கழிவு நீரை மிதித்துக்கொண்டே மீண்டும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ள அறைக்குச் செல்கிறார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால், நோயாளிகளைப் பார்க்க வரும் உறவினர்களும் அந்தக் கழிவு நீரை மிதித்துக்கொண்டே மூக்கை பொத்தியபடி செல்கின்றனர். இதுதவிர, இம்மருத்துவமனையில் உள்ள பெரும்பாலான கழிவறைகள் துர்நாற்றம் வீசுகிறது என்றும், கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவில்லை என்றும், இதன் காரணமாக பல இடங்களில் நோயாளிகள் கழிவறைகளைப் பயன்படுத்த முடியாத நிலை கடந்த ஒரு வாரமாக ஏற்பட்டுள்ளன என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, மதுரை உட்பட காலியாக உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வர் பணியிடங்களை நிரப்பக்கோரிய வழக்கில், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு முதல்வரை நியமனம் செய்ய இயலவில்லை எனில், மருத்துவக்கல்லூரிகளை திறப்பது ஏன் என்று திமுக அரசுக்கு சரமாரியாகக் கேள்விகளை எழுப்பிய செய்தி ஊடகங்களில் வெளிவந்தது.

ஏற்கெனவே, நான் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளதைக் குறிப்பிட்டு உடனடியாக ஏற்கனவே கொரோனா காலத்தில் பணிபுரிந்தவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்பவும், அரசு மருத்துவமனைகளில் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை குறித்தும் அறிக்கைகள் மற்றும் பேட்டிகள் வெளியிட்டிருந்தேன்.

இனியாவது, சுகாதாரத் துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்துகளை உடனடியாக வழங்கவும், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை உட்பட தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் காணப்படும் சுகாதார சீர்கேடுகளை போர்க்கால அடிப்படையில் சீர் செய்திடவும் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி கூறியுள்ளார்.

சி.எல்.பெய்டு மேத்தா பார்மசி கல்லூரி சார்பில் மருந்து பராமரிப்பு அம்சங்கள் குறித்து 2 நாள் மாநாடு

சென்னை, ஆக. 30– சென்னையில் உள்ள சி.எல். பெய்டு மேத்தா பார்மசி கல்லூரி சார்பில், "உலகளாவிய மருந்து பராமரிப்பு அம்சங்கள், தற்போதைய மற்றும் எதிர்கால போக்குகள்" குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு நேற்று (29–ந் தேதி) மற்றும் இன்று (30–ந் தேதி) வெற்றிகரமாக நடைபெற்றது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் கே.நாராயணசாமி இந்த மாநாட்டை துவக்கி வைத்தார். தலைவர் ஆர். சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் செயலாளர் மற்றும் நிறுவனர் எஸ்.ஏ. ரமேஷ், அறங்காவலர், முதல்வர் ஏ.சங்கர், துணை முதல்வர் சி.என். நளினி, டாக்டர் ராமலட்சுமி உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மருத்துவக் கல்லூரியின் மருந்தியல் கல்லூரி முதல்வரும் தலைவருமான டாக்டர் வி. நிரைமதி, ராமசந்திரா மருத்துவக் கல்லூரியின் பேராசிரியரும் முதல்வருமான டாக்டர் ஏ. ஜெரட் சுரேஷ், வேல்ஸ் பல்கலைக்கழக மருந்து அறிவியல் பள்ளியின் டீன் மற்றும் இயக்குனர் டாக்டர் ஷண்முகசுந்தரம் உள்ளிட்ட 850 பேர் பங்கேற்றனர்.

இதில் மருந்து பராமரிப்பை மேம்படுத்துவதற்கும், கற்றல், நெட்வொர்க்கிங் மற்றும் நிபுணர்களிடையே, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களிடையே அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது

நோய்த்தடுப்பு பராமரிப்பு, முழு பிரகாசமான கூட்டுறவு வாய்ப்புகள், ஒரு சுகாதார அணுகுமுறை மற்றும் சுகாதாரத்தில் பெரிய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு போன்ற தலைப்புகளில் பல முக்கிய அமர்வுகளும் இந்த மாநாட்டில் இடம்பெற்றன.

இதில் டாக்டர் எப்டேசம் அகமது, புல்பிரைட் திட்ட ஒருங்கிணைப்பாளர், யுனைடெட் ஸ்டேட்ஸ் இந்தியா கல்வி அறக்கட்டளை, டாக்டர் கே. வித்யா தர்ஷினி, திருகோணமலை வளாகம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை, டாக்டர் மிர்சா ரகபியுல்லா பேக், டாக்டர் ராம் பிரவீன் குமார் முத்துராமலிங்கம் மற்றும் டாக்டர் வாசுதேவன் ராமச்சந்திரன், இணை பேராசிரியர், மருத்துவ அறிவியல் துறை, சுகாதார அறிவியல் பீடம், கோலாலம்பூர், மலேசியா). இபோஸ்டர்ஸ் விளக்க அமர்வு மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு மருந்து பராமரிப்பின் பல்வேறு அம்சங்களில் அவர்களின் புதுமையான பணிகளை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்கியது.

பெயர் மாற்றம்

LAKSHMI SUNDAR, கணவர் பெயர்: SUNDHARAMOORTHY, பிறந்த தேதி: 01.06.1958, நெ. 5/29, வள்ளலார் தெரு, செந்தில் நகர், திருமுல்லைவாயல், ஆவடி, சென்னை – 600 062. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **LAKSHMI SUNDHARAMOOTHY** என்று அழைக்கப்படுகிறேன்.

LAKSHMI SUNDAR

பெயர் மாற்றம்

MAHAKALI CHANDRASHEKAR, தந்தை பெயர்: Mahankali Gunabhushanam, பிறந்த தேதி: 17.02.1961, MIG 282, TNHB, பேஸ்–5, ரங்காபுரம், சத்துவாச்சேரி, வேலூர், தமிழ்நாடு–632009. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MAHANKALI CHANDRA SEKHAR** என்று அழைக்கப்படுகிறேன்.

MAHAKALI CHANDRASHEKAR

பெயர் மாற்றம்

DEVADASA, தந்தை பெயர்: Kaiyoor Raghavendra Acharya, பிறந்த தேதி: 01.07.1970, நெ.70/76, பொன்னி ப்ளாட்ஸ், ப்ளாட் நெ.4, B–பிளாக், சரவண பெருமாள் 1வது சந்து, புரசைவாக்கம், சென்னை–600 084. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KAIYOOR RAGHAVENDRA DEVADAS ACHARYA** என்று அழைக்கப்படுகிறேன்.

DEVADASA

பெயர் மாற்றம்

BURUKANISHA JASMIN TIPPUSUITAN, தந்தை பெயர்: Thippu Sulthan, பிறந்த தேதி: 20.05.1978, நெ. 250, பாரதி சாலை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BURUKANISHA JASMIN THIPPU SULTHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

BURUKANISHA JASMIN TIPPUSUITAN

பெயர் மாற்றம்

Old Surname: AADITIYA, Old Given name: MANIVANNAN, பிறந்த தேதி: 06.09.2012, பிளாட் நெ.1000, 30வது குறுக்கு தெரு, சாய் கணேஷ் நகர், பள்ளிக்கரணை, சென்னை – 600100. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **New Surname: ADITHYA SAI New Given name: MANIVANNAN** என்று அழைக்கப்படுகிறார்.

MANIVANNAN PACHIAPPAN, தந்தை

பெயர் மாற்றம்

JAHIR HUSSAIN, தந்தை பெயர்: Thippu Sulthan, பிறந்த தேதி: 11.05.1972, நெ. 44/45, மேயர் சிட்டி பாபு தெரு, எல்லிஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ZAHIR HUSSAIN** என்று அழைக்கப்படுகிறேன்.

JAHIR HUSSAIN

பெயர் மாற்றம்

Yasmin Fathima Mohamed Issack, கணவர் பெயர்: Issack, பிறந்த தேதி: 05.10.1979, நெ. 57A, மக்தூம் மாரிக்கர் தெரு, வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை –604 408, தமிழ்நாடு. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **YASMIN FATHIMA ISSACK** என்று அழைக்கப்படுகிறேன்.

Yasmin Fathima Mohamed Issack

பெயர் மாற்றம்

MOHAMMED ISHAQ, தந்தை பெயர்: Abdul Jappar, பிறந்த தேதி: 17.05.1977, நெ. 57A, மக்தூம் மாரிக்கர் தெரு, வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை –604 408, தமிழ்நாடு. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ISSACK** என்று அழைக்கப்படுகிறேன்.

MOHAMMED ISHAQ

பெயர் மாற்றம்

Old Given Name: DURAICHI

Old Sur name: VELAIPPAN, பிறந்த தேதி: 07.03.1953, நெ.3/6, தீப்பாஞ்சியம்மன் கோவில் ரோடு, பொழிச்சலூர், காஞ்சிபுரம், பின்கோடு – 600074, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given name: DURAICHI New Sur name: SENTHUR PANDIAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: DURAICHI
Old Sur name: VELAIPPAN

பெயர் மாற்றம்

Old Given Name: MOHAMMED JAMALUDEEN Sur Name: ..... பிறந்த தேதி: 07.08.2002, நெ.1332, பிளாக் 13, 3வது மாடி, இந்துஸ் ஆனந்தியா, எகத்தூர், படூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு பின்கோடு – 603103, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given name: MOHAMMED JAMALUDEEN Sur name: NIYASUDEN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: MOHAMMED JAMALUDEEN Sur Name: .....

பெயர் மாற்றம்

MUTHUVEL SELVARAJ, தந்தை பெயர்: Selvaraj, பிறந்த தேதி: 01.07.1987, நெ.97, திரு–வி–க– ரோடு, கரூர்–1, பின்கோடு – 639001. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MUTHUVEL MUTHUSAMY SELVARAJ** என்று அழைக்கப்படுகிறேன்.

MUTHUVEL SELVARAJ

பெயர் மாற்றம்

GOVINDARASU VEERAMUTHU, தந்தை பெயர்: Veeramuthu, பிறந்த தேதி: 15.06.1978, நெ.2/275, கிழக்கு தெரு, ஆலத்தூர் அஞ்சல், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம், பின்கோடு – 606303. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GOVINTHARAJ VEERAMUTHU** என்று அழைக்கப்படுகிறேன்.

GOVINDARASU VEERAMUTHU

பெயர் மாற்றம்

UZMA, கணவர் பெயர்: Shaik Mohammad Maahir, பிறந்த தேதி: 05.05.1986, எண்,3, 2வது மாடி, நெஸ்ட் அபார்ட்மெண்ட்ஸ், செட்டி 2வது தெரு, மேல் அயனம்பாக்கம், சென்னை, திருவள்ளூர் – 600095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **M.UZMA** என்று அழைக்கப்படுகிறேன்

UZMA

பெயர் மாற்றம்

GANESAN VELSWAMY, தந்தை பெயர்: VELUSAMY, பிறந்த தேதி: 06.03.1967, நெ. 12/13, பாபு தெரு, அகரம், சென்னை –600 082. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GANESAN VELUSAMY** என்று அழைக்கப்படுகிறேன்.

GANESAN VELSWAMY

பெயர் மாற்றம்

NIKITA KAMLESH GANDHI, கணவர் பெயர்: Darshan Paresh Kothari, பிறந்த தேதி: 21.07.1991, D 301, Metrozone, 44 பிள்ளையார் கோயில் தெரு, VR மால் அடுத்து அண்ணா நகர், சென்னை – 600 040. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NIKITA DARSHAN KOTHARI** என்று அழைக்கப்படுகிறேன்.

NIKITA KAMLESH GANDHI

பெயர் மாற்றம்

AFEEFAH IFFATH, தந்தை பெயர்: SYED AEJAZ, பிறந்த தேதி: 17.02.2005, நெ.9, ப்ளாட் நெ.24, Sardonyx Sanctuary, கான்ஸ்டபிள் சாலை, அயனாவரம், சென்னை – 600 023. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **AFEEFAH IFFAT** என்று அழைக்கப்படுகிறேன்.

AFEEFAH IFFATH

BEFORE THE DEBT RECOVERY TRIBUNAL III, CHENNAI
O.A.No.221 of 2024

Indian Overseas Bank
Represented by its
Senior Manager Mr.L.Antoon
MMDA Nagar Branch
B5, Water Tank Road,
Chennai 600 106 --Applicant

Vs.

1. S.Muthukumar
2. M.Ganga
Both are at No.95/2, S-2,
2nd Floor, Kannadasan Street, Kodambakkam,
Chennai – 600 024
Also at 31/53A, Sornambigai 1st Street, Virugambakkam, Chennai 600 092 ....Defendants

To:-
1. S.Muthukumar
2. M.Ganga
Both are at No.95/2, S-2, 2nd Floor, Kannadasan Street,
Kodambakkam,
Chennai – 600 024
Also at 31/53A, Sornambigai 1st Street, Virugambakkam, Chennai 600 092

Take notice that in the above application, the Debt Recovery Tribunal III, Chennai on 27.8.2024 was pleased to order notice to you by way of paper publication in tamil news daily with a hearing date as 27.9.2024. You are required to be present in person or through counsel on 27.9.2024 at 11.30 am for the hearing in the above OA before the Debt Recovery Tribunal III, Chennai, failing which the matter will be heard and decided in your absence.

K.K.MURRALITHARAN
Advocate
O.No.125, N.No.257, Room No.B,
5th Floor, Canara Bank Building,
Angappa Naicken Street, Chennai- 6000001
Ph:9884043499

JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN: L51102TN1982PLC009711
பதிவு அலுவலகம்: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு, இந்தியா 641006
மொபைல் எண்:7395922291/92
மின்னஞ்சல்: investor@jmjfintechltd.com இணையதளம்: www.jmjfintechltd.com

41வது வருடாந்திர பொதுக்கூட்ட (AGM) அறிவிப்பு & மின்னணு வாக்குப்பதிவு தகவல்

1. 21 ஆகஸ்ட் 2024 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சாதாரண மற்றும் சிறப்பு வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் உறுப்பினர்களின் 41வது வருடாந்திர பொதுக்கூட்டம் 23 செப்டம்பர், 2024 திங்கட்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி("VC")/இதர ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ('பட்டியல் விதிமுறைகள்') மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (எம்சிஏ) வெளியிட்ட ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020; ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020; மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020; ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2021; டிசம்பர் 08, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 19/2021; மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2022; டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 11/2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 09/2023 மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா வெளியிட்ட மே 13, 2022 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62; ஜனவரி 05, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு உறுப்பினர்கள் நேரடியாக வருகை தேவையில்லை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) காணொளி காட்சி ("VC") அல்லது இதர ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலம் நடைபெற உள்ளது. எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் 41வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்சத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.
3. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையின் மின்னணு நகல்கள், குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருடன் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும். மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் www.jmjfintechltd.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளம் https://www.bseindia.com/ லும் கிடைக்கும். மேற்கூறிய ஆவணங்களின் நகல் நிறுவனத்தால் அதன் உறுப்பினர்களுக்கு கிடைக்காது என்பதை உறுப்பினர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. கட்ஆஃப் தேதியில் (திங்கட்கிழமை, 16 செப்டம்பர், 2024) உறுப்பினர்களின் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க தகுதியுடையவர்கள். நிறுவனம் CDSL–லிருந்து மின்னணு வாக்களிக்கும் சேவைகளைப் பெற்றுள்ளது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு காலம் செப்டம்பர் 20, 2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) மணிக்குத் தொடங்கி செப்டம்பர் 22, 2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும்.
5. பட்டியல் விதிமுறைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 91 ஆகியவற்றுக்கு இணங்க, கம்பனியின் உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் செப்டம்பர் 17, 2024 செவ்வாய்க்கிழமை முதல் செப்டம்பர் 23, 2024 திங்கட்கிழமை வரை (இரு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்பட்டு இருக்கும்.
6. 41வது ஆண்டு பொதுக் கூட்டத்திற்கான மின்னணு வாக்களிப்பு செயல்முறை குறித்த அறிக்கையை வழங்குவதற்கான ஆய்வாளராக, M/s. லக்ஷ்மி சுப்ரமணியன் & அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவனச் செயலாளர்களை நிறுவனம் நியமித்துள்ளது.
7. நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், பெயர், போலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரி, பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான்/ ஆதாரின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல், உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரியை ஆதரிக்கும் ஆவணங்களுடன் purvashr@mtnl.net.in–க்கு மின்னஞ்சல் அனுப்பி பதிவு செய்யலாம். டீமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், investor@jmjfintechltd.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்கலாம் மற்றும் சரியான நேரத்தில் தகவல்தொடர்புகளைப் பெற ஆர்டிஏ/ டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
8. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் ஆடியோ காட்சி மூலம் பங்கேற்பதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் வாக்களிப்பது குறித்து வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் வினவல்கள் இருந்தால், மின்னணு வாக்களிப்பு செயல்முறை பற்றிய தெளிவுகளைப் பெற, CDSLன் மின்னணு வாக்களிப்பு இணையதளத்தில் உறுப்பினர்கள் அறிவுறுத்தல்களைப் பார்க்கவும் அல்லது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் பயனர் கையேட்டைப் பார்க்கவும்.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– திரு. ஜோஜு மடத்தும்பாடி ஜானி
நிர்வாக இயக்குனர்

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 30.08.2024

பெயர் மாற்றம்

BHAVANI WILLIAMS, கணவர் பெயர்: Raeburn Luke Williams, பிறந்த தேதி: 10.06.1967, நெ.42/95, 2வது மாடி, Shyam's Nest லோகோ ஸ்கீம் 2வது தெரு, அகரம், ஜவகர் நகர், சென்னை – 600 082. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BHAVANI.R** என்று அழைக்கப்படுகிறேன்.

BHAVANI WILLIAMS

NAME CHANGE

I, YASHMITHA, D/o Kamal Chand, Date Of Birth: 29.01.2003, Residing @ No.44, Perumal Koil Garden St, Sowcarpet, Chennai. Have changed my name from Yashmitha to Yashmitha Jain for all Future Purposes

பொது அறிவிப்பு

**நான், திருமதி.எம்.செல்வராணி (ஆதார் எண்.762978993878) க/பெ. திரு.முத்துநல்லியப்பனின் மனைவி, சுமார் 65 வயது, எண்.25 & 26, 3வது தெரு, ஆபிசர் காலினி விரிவாக்கம், முகப்பேர், சென்னை-600 050. அம்பத்தூர் துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 20.12.1984 தேதியிட்ட ஆவணம் எண்.5581/1984 இல் பதிவு செய்யப்பட்ட எனது சொத்தின் அசல் நில ஆவணத்தை நான் தொலைத்துவிட்டேன் என்பதை இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த ஆவணத்தை பற்றி தகவல் தெரிந்தாலோ அல்